DEPOSITION OF WITNESS

In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,

CC . No. 76 of 2021

Prosecution witness: LW -8 / PW - 6

| | |
|---|---|
| Name | ஜெகநாதன் |
| Fathers / Husband name | சுந்தரவடிவேல் |
| Village | மீஞ்சூர் |
| Age | 41 |

Accused called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2026.

முதன்மை விசாரனை நேரம்- மதியம் 12.53

1. நான் AC மெக்கானிக் வேலை செய்து வருகின்றேன். நான் பெரியபாளையத்திலிருந்து மீஞ்சூருக்கு சென்றுகொண்டு இருந்தபோது வழியில் விபத்து நடந்ததை பார்த்தேன். அப்போது பைக்கிள் சென்ற மூவரில் இரண்டு பேர் இறந்துவிட்டனர். அடிப்பட்ட ஒருவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலீசார் அங்கு வந்து விசாரணை நடத்தி மகசர் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் காட்டப்படும் முதல் கையொப்பம் என்னுடையது தான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

2. நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 5 மணி இருக்கும். நீங்கள் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதில் எழுதியிருந்த விவரங்களை நான் படித்துபார்த்துவிட்டு தான் கையொப்பம் செய்தேன்.

3. அதில் என்ன விவரம் இருந்தது என்றால் விபத்து நடந்த விவரம் இருந்தது அதை அந்த சம்பவ இடத்தில் வந்து SI விசாரணை செய்ததது இருந்தது. அதை பார்த்துவிட்டு நான் கையொப்பம் செய்தேன்.

4. நீங்கள் படித்து பார்க்காமல் கையொழுத்து போட்டுள்ளீர்கள் அதனால் தான் அதில் உள்ள விவரங்களை நீங்கள் கையொப்பம் போட்ட தாளில் இருந்தபடி கூறமுடியவில்லை என்றால் சரியல்ல.

5. நீங்கள் கையொழுத்து போடும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் மாலை 5.30 மணி இருக்கும்.

6. சம்பவ இடத்தில் விபத்து ஏற்பட்ட 3பேரும் ஒரே இருசக்கர வாகனத்ததை ஓட்டி வந்ததார்கள் என்றால் சரிதான்.

7. இறந்த நபர்களுக்கு இழப்பீடு தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 01.00